

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திராவிட பொங்கல் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 57 வது வார்டு திமுக சார்பில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் குடைவீடு அருண்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 500க்கும் மேற்பட்டோருக்கு பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன், பகுதி செயலாளர் எஸ்.எஸ்.மாறன் ஆகியோர் பரிசுகள் வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆட்டோ சுரேஷ், துரைமணி, பரமசிவம், இந்திரஜித், கார்த்தி, விஜி மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

### மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி

# கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்கிற சூழ்நிலையை உருவாக்கியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

திருப்பூர், ஜன. 19 –

மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்கிற சூழ்நிலையை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கி இருக்கிறார் என்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ. சாமிநாதன் பெருமிதத்துடன் கூறினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சங்கமித்திரை தலைமையில் 13.01.2026 அன்று திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஸ்ரீஹாலில் அரசு பள்ளிகளில் பயின்று நான் முதல்வன் உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் மூலம் 7.5 சதவீதம் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பொறியியல், மருத்துவம், வேளாண்மை மற்றும் சட்டப்படிப்புகளுக்கு தேர்வு செய்யப்பட்டு கல்வி பயின்று வரும் காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் மாணாக்கர்களுக்கு பொன்னாடை அணிவித்து கேடயங்களை வழங்கி சிறப்பித்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் படிப்பில் மட்டுமல்லாமல் வாழ்க்கையிலும் வெற்றியாளர்களாகும் வகையில் திறன் மேம்பாடு மற்றும் வழிகாட்டுதல் திட்டம் ஆகிய ”நான் முதல்வன் என்கிற சிறப்பான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனவு திட்டங்களில் ஒன்றான ”நான் முதல்வன் என்கிற சிறப்பான திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு கனவுகளை உருவாக்கி முன்னேற்ற செய்ய வேண்டும் என்பது தான்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்கிற தலைப்பில் சென்னையில் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் ”நான் முதல்வன் திட்டத் தில் வெற்றி பெற்ற மாணவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள், பள்ளிப்படிப்பில் மாணாக் கர்கள் படிக்கும் போது உயர்கல்வியில் என்ன படிக்கலாம் என்பது பற்றிய போதுமான விழிப்பு ணர்வினை ஏற்படுத்தும் பொருட்டும், கல்லூரிகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் குறிப்பாக கிராமப்புறங்களை சார்ந்த மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் மாவட்டத்திலுள்ள அனைத்து மேல்நிலைக்கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி பயின்று வரும் மாணாக்கர்களுக்கு அனுபவ ரீதியாக இணையதளம் வாயிலாக கற்றல் திறன்களும் சமந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் மூலம் ”நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதில் உயர்கல்வியில் இளைஞர்களுக்கான மாபெரும் திறன் மேம்பாட்டுத்திட்டமான ”நான் முதல்வன் திட்டத் தின் கீழ் புதிய தொழில் நுட்பங்களுக்கு தேவையான திறன்களை பெறுவதற்கு அரசால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு ள்ளது. வேலைக்கு செல்வதற்கு முன்னதாகவே, தொழில்நுட்பம் குறித்து அறிந்து கொள்வதற்கு மாணாக்கர்களுக்கு வழிகாட்டியாக இத்திட்டம் அமைந்துள்ளது. ”நான் முதல்வன் இயங்குதளமானது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு படிப்புகள் மற்றும் தொழில் சார்ந்த திறன் சலுகைகள் பற்றிய தொடர்புடைய தகவல்களை இலவசமாக வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டு மாணவர்கள் தங்களின் தொழில் இலக்குகளை அடைந்திடவும், மாணாக்கர்களுக்கு ஆர்வமுள்ள துறையினை தேர்ந்தெடுத்து இதன்மூலம் தொழில்நுட்ப நிறுவனங்களினால் வழங்கப்படும் பயிற்சியினை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கல்வியைத் துறையை பள்ளிக்கல்வி என்றும் கல்லூரி கல்வி என்றும் இரண்டாக பிரித்து அதற்கான தனியாக அலுவலர்கள் நியமித்து தனியாக அமைச்சர்களை உருவாக்கி உயர் கல்வியிலும் சிறப்பான தமிழ்நாடு உருவாகுவதற்கான வாய்ப்பை அடித்தளமிட்டார்கள்.

”புதுமைப்பெண் மற்றும் ”தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு/பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. அரசு கல்லூரியில் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தபட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்; திருமண உதவித்திட்டத்தை தொடங்கி வைத்து 8ம் வகுப்பு வரை படித்திருந்தால் ரூ.5,000 திருமண உதவித்தொகை வழங்கினார்கள். அதன் முக்கிய நோக்கம் பெண்களை படிக்க வைக்க வேண்டும். பெண்கள் படித்தால் மட்டுமே வீடுகளிலுள்ள குழந்தைகளுக்கு கல்வியை ஊக்குவிக்க சிறந்த வாய்ப்பாக அமையும் என்ற தொலை நோக்கு பார்வையில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. பின்னர் 10ம் வகுப்பு வரை படித்திருந்தால் ரூ.10,000 திருமண உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டது. அப்பொழுதுதான் எட்டாம் வகுப்பு நிறுத்தக்கூடிய சூழ்நிலை தாண்டி பத்தாம் வகுப்பு வரை மாணவியர்கள் படித்தார்கள்.

திருப்பூர் மாவட்டத்தில் ”நான் முதல்வன் திட்டத்தில் ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழில் படிப்புக்கு சென்றுள்ளார்கள். மேலும், முதல்கட்டமாக ஏறத்தாழ 20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகிற நிகழ்ச்சி துவங்கப்பட்டு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியும் மருத்துவமும் இரு கண்கள் என்று முக்கியத்துவம் தந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பெற்றோர்களுடைய சுமையை குறைத்து மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். மேலும், மாணவர் செல்வங்கள் எதிர்காலத்தில் நட்சத்திரங்களாக திகழவேண்டும் என்று வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் , மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், மாவட்ட முன்மைக்கல்வி அலுவலர் புனித அந்தோனியம்மாள், ”நான் முதல்வன் திட்ட மாவட்ட கருத்தாளர் விஜயகுமார், மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், காங்கேயம் இளைஞர் அணி அமைப்பாளர், நகர்மன்றத்தலைவர் சூரியபிரகாஷ், உதவி திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளி கல்வி) அண்ணாதுரை, முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திமுக தென்காசி தெற்கு மாவட்டம் கிழக்கு ஒன்றியம் அய்யாபுரம் கிராமத்தில் பேராசிரியர் மு.பி.பா (எ) மு.பி.மணிவேந்தன் நினைவுக் கொடிக் கம்பத்தில் திமுக தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கழகக் கொடியேற்றினார். உடன் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம் , தென்காசி முன்னாள் ஒன்றிய செயலாளர் குற்றாலம் இராமையா, தென்காசி ஒன்றியத் தலைவர் சேக் அப்துல்லா மற்றும் மு.பி.பா அறக்கட்டளை அறங்காவலர்கள் மு.பி.பா.அன்புச்செழியன். திமுக ஒன்றிய பிரதிநிதி, கலையரசி, வெண்ணிலா, மணிவண்ணன், அனிதா மற்றும் அய்யாபுரம் திமுக கிளை சார்பில் செயலாளர் செல்வக்குமர், கழத்தினர்கள் கனகராஜ், வேல்ராஜ் மற்றும் ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், காட்டுக்கூடலூர் கிராமத்தில் திராவிடப்பொங்கல் விழா , தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி ஏற்பாட்டில் , கோலப் போட்டி, சிறுவர், மகளிர் இளைஞர்கள் ,பங்குகொண்ட விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. வெற்றிபெற்றவர்கள்,பங்குபெற்றவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கிளை செயலாளர்கள் கோதண்டபாணி,குமார் , முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் பாரிவள்ளல் பூபதி,பாண்டியன், ராமச்சந்திரன், ஆசிரியர் பொ. தமிழய்யா,குணசேகரன், ஊராட்சிமன்ற உறுப்பினர் முருகன், இளங்கோவன்,, நேரு இளைஞர் நற்பணி மன்றம் அறிவழகன்,பழனிவேல்,மனோகரன், மற்றும் பொன்மலர் புகழேந்தி, பழனியம்மாள் பாரிவள்ளல், கடலூர்மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிலோமினா செந்தமிழ்செல்வன், ஜெகநாத், கிரி, சம்பத்குமார், தேவா மற்றும் ஊர்மக்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை ஆசிரியர் செந்தமிழ்செல்வம் KKB கபடிக்குழு அப்பு, ராஜ்மோகன், மகேஷ்,சோழன், குருமூர்த்தி ,சூர்யா,ஸ்ரீராம், வேலு ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்தினர்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி மத்திய -மத்தூர் வடக்கு, மத்தூர் தெற்கு, மத்தூர் மத்திய - பர்கூர் வடக்கு, பர்கூர் தெற்கு, பர்கூர் மத்திய - காவேரிப்பட்டினம் கிழக்கு - போச்சம்பள்ளி வடக்கு, போச்சம்பள்ளி தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் **கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி மத்தி**ய ஆகிய 3 ஒன்றியங்களாகவும் -மத்தூர் வடக்கு, தெற்கு ஆகிய 2 ஒன்றியங்கள் மத்தூர் வடக்கு, மத்தூர் தெற்கு, மத்தூர் மத்திய ஆகிய 3 ஒன்றியங்களாகவும் - பர்கூர் வடக்கு, பர்கூர்தெற்கு காவேரிப்பட்டிணம் கிழக்கு, போச்சம்பள்ளி ஆகிய 4 ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட்டு, **பர்கூர் வடக்கு, பர்கூர் தெற்கு, பர்கூர் மத்திய, காவேரிப்பட்டிணம் கிழக்கு, போச்சம்பள்ளி வடக்கு போச்சம்பள்ளி தெற்கு,** ஆகிய 6 ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு அந்தந்த ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் :** 1.கம்மம்பள்ளி, 2.மல்லிநாயனப்பள்ளி, 3.காட்டிநாயணப்பள்ளி, 4.பெத்தனப்பள்ளி, 5.அகசிப்பள்ளி, 6.தேவசமுத்திரம், 7.கொண்டேப்பள்ளி, 8.பெரியமுத்தூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : நாராயணன் திருப்பதி** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் :** 1.கூலியம், 2.கங்கலேரி, 3.செம்படமூதூர், 4.பெல்லம்பள்ளி, 5.இடிகல்அகரம், 6.மோரமடுகு, 7.சிக்கபூவத்தி, 8.ஆலப்பட்டி, 9.வேலகலஹள்ளி, 10.சோக்காடி, 11.பெல்லாரம்பள்ளி, 12.பச்சிகானப்பள்ளி ஆகிய 12 ஊராட்சிகள்.

**கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் : டி. தனசேகரன்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**கிருஷ்ணகிரி மத்திய ஒன்றியம் :** 1.குருபரப்பள்ளி, 2.பிகே.செந்தனப்பள்ளி, 3.என்னைகோல்புதூர், 4.ஜிஞ்சுப்பள்ளி, 5.திப்பனப்பள்ளி, 6.பையனப்பள்ளி, 7.கல்லுக்குறிக்கி, 8.ஜாகீர்வெங்கடாபுரம், 9.பெத்தத்தாளாப்பள்ளி ஆகிய 9 ஊராட்சிகள் .

**கிருஷ்ணகிரி மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : என்.மகேந்திரன்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் வடக்கு ஒன்றியம் :** 1.கண்ணன்டஹள்ளி, 2.நாகம்பட்டி, 3.மத்தூர், 4.கவுண்டனூர், 5.வாலிப்பட்டி, 6.கே.எட்டிப்பட்டி, 7.ராமகிருஷ்ணபதி, 8.கே.பாப்பாரபட்டி ஆகிய 8 ஊராட்சிகள்.

**மத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : குணா. வசந்தரசு,** மத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் தெற்கு ஒன்றியம்** : 1.அந்தேரிப்பட்டி, 2.சாம்பல்பட்டி, 3.நாரலப்பள்ளி, 4.குன்னத்தூர், 5.கொடமாண்டபட்டி, 6.கெரிகேப்பள்ளி, 7.சாலமரதுப்பட்டி,8.சூளக்கரை,9.வீராச்சிக்குப்பம் ஆகிய 9 ஊராட்சிகள்

**மத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.ஆர். கே.நரசிம்மன்** மத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மத்தூர் மத்திய ஒன்றியம் :** 1.களர்பதி, 2.பொம்மேப்பள்ளி, 3.சிவம்பட்டி, 4.ஒட்டப்பட்டி, 5.பாளேத்தோட்டம், 6.பாராண்டபள்ளி, 7.தாதம்பட்டி, 8.ஜிங்கில்கதிரம்பட்டி, 9.வாணிப்பட்டி, 10.ஆனத்தூர், 11.இனாம்காட்டுப்பட்டி ஆகிய 11 ஊராட்சிகள்.

**மத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : வி.செந்தில் மத்தூர்,** கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் வடக்கு ஒன்றியம் :** 1.குருவிநாயனப்பள்ளி, 2.சின்னமட்டாரப்பள்ளி, 3.வரட்டனப்பள்ளி, 4.பெலவர்த்தி, 5.பாலேப்பள்ளி, 6.மாதேப்பள்ளி, 7.பாலிநாயனப்பள்ளி, 8.ஒரப்பம் ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பர்கூர் பேரூர்.

**பர்கூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : வி.ஜி.ராஜேந்திரன்** பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் தெற்கு ஒன்றியம் :** 1.சூலாமலை, 2.அஞ்சூர், 3.ஜெகதேவி, 4.சிகரலப்பள்ளி, 5.பட்லப்பள்ளி, 6.குட்டூர், 7.பண்டசீமனூர், 8.தொகரப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**பர்கூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : எம்.அறிஞர்** பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பர்கூர் மத்திய ஒன்றியம் :** 1.அச்சமங்கலம், 2.மல்லப்பாடி, 3.ஒப்பதவாடி, 4.காரகுப்பம், 5.கந்திகுப்பம், 6.கொண்டநாயனப்பள்ளி, 7.மஜீத்கொல்லஹள்ளி, 8.ஐகொந்தகொத்தப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**பர்கூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : கு. காந்தி** பர்கூர்,கிருஷ்ணகிரி மாவட்டம்.

**காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம் :** 1.எருமாம்பட்டி, 2.பாலேகுளி, 3.தளிஅள்ளி, 4.பெண்னேஸ்வரமடம், 5.மாரிசெட்டிஅள்ளி, 6.நெடுங்கல், 7.ஆவத்தவாடி, 8.தட்ரஹள்ளி, 9.தாமோதரஹள்ளி, 10.அகரம், 11.குடிமேனஹள்ளி, 12. பண்ணந்தூர் ஆகிய 12 ஊராட்சிகள்.

**காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : க.மகேந்திரன்** காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி

**போச்சம்பள்ளி வடக்கு ஒன்றியம் :** 1.மாகாதேவ கொல்லஹள்ளி, 2.காட்டகரம், 3.வெப்பாலம்பட்டி, 4.வலசகவுண்டனூர், 5.குள்ளம்பட்டி, 6.பெருகோப்பனப்பள்ளி, 7.பாப்பாரப்பட்டி, 8.வாடமங்கலம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**போச்சம்பள்ளி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : எஸ். இளையராஜா** போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**போச்சம்பள்ளி தெற்கு ஒன்றியம் :** 1.போச்சம்பள்ளி, 2.வீரமலை, 3.விளங்காமுடி, 4.மருதேரி, 5.செல்லகுட்டப்பட்டி, 6.கீழ்குப்பம், 7.பாரூர், 8.அரசம்பட்டி, 9.கோட்டப்பட்டி, 10.புளியம்பட்டி ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் நாகரசம்பட்டி பேரூர்.

**போச்சம்பள்ளி தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : வி.சாந்தமூர்த்தி** போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## கோவை தெற்கு மாவட்டம்

# கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட குறிச்சி வடக்கு, குறிச்சி தெற்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் அதற்குட்பட்ட வாக்குச்சாவடிகள் விவரம் மற்றும் வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் **கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகளுக்**குட்பட்ட;

**குறிச்சி வடக்கு, குறிச்சி தெற்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுகளில் அடங்கியுள்ள வட்டங்கள்** பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் கொண்டதாக அமைவதோடு, பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**கிணத்துக்கடவு தொகுதி**

**குறிச்சி வடக்கு பகுதி**

**வட்டங்கள் :** 95, 95அ, 95ஆ, 99, 99அ ஆகிய 5 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**95–வது வட்டம் :** 136, 137, 138, 139, 140, 143 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**95வது வட்டப் பொறுப்பாளர் : முத்தலி,** 407/2, வசந்தம் நகர், 4வது வீதி, போத்தனூர்,கோவை.

**95அ–வது வட்டம் :** 141, 142, 144, 145, 146, 152 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் .

**95அ–வது வட்டப் பொறுப்பாளர் : அசாருதீன்,** 1/29, பி.கே.எம். காலனி, 3வது வீதி, ஆத்துப்பாலம், கோவை.

**95ஆ–வது வட்டம் :** 147, 149, 150, 151, 153, 162 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் .

**95ஆ–வது வட்டப் பொறுப்பாளர் : கே. பழனிச்சாமி,** 15, பாரதி நகர், மைல்கல், போத்தனூர் – 641023, கோவை.

**99–வது வட்டம் :** 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187 ஆகிய 9 வாக்குச் சாவடிகள் .

**99–வது வட்டப் பொறுப்பாளர் : முரளி,** போத்தனூர், கோவை.

**99அ–வது வட்டம் :** 172, 173, 174, 175, 176, 177, 178 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் .

**99அ–வது வட்டப் பொறுப்பாளர் :** அ. சாணவாஸ், 41, அமீர் சாயபு வீதி, நூராபாத், போத்தனூர் – 641023, கோவை.

**குறிச்சி தெற்கு பகுதி**

**வட்டங்கள் :** 97, 97அ, 97ஆ, 98, 98அ, 100, 100அ, ஆகிய 7 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**97–வது வட்டம் :** 79, 80, 81, 83, 94, 95, 96, 100 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**97வது வட்டப் பொறுப்பாளர் : க. மகாலிங்கம்,** 16/65, பாடசாலை வீதி, ஈச்சனாரி, கோவை – 24.

**97அ–வது வட்டம் :** 85, 86, 87, 88, 93, 97, 102, 111 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**97அ–வது வட்டப் பொறுப்பாளர் : எம். பீர் மௌலானா,** 4, நேதாஜி நகர், மதுக்கரை ரோடு, சிட்கோ – 641021, கோவை.

**97ஆ–வது வட்டம் :** 104, 105, 106, 107, 108, 109, 110 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**97ஆ–வது வட்டப் பொறுப்பாளர் : எஸ். ராஜ்,** 14ஏ, கே.வி.கே. நகர்,மதுக்கரை மெயின் ரோடு, சிட்கோ – 641021, கோவை.

**98–வது வட்டம் :** 124, 132, 133, 161, 164, 171 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**98வது வட்டப் பொறுப்பாளர் : நா. குமரேசன்,** 18, பாரத் நகர், போத்தனூர், கோவை – 23.

**98அ–வது வட்டம் :** 122, 123, 159, 160, 166, 170 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**98அ–வது வட்டப் பொறுப்பாளர் : ஆர். கண்ணன்,** 63எச், சிவசக்தி கார்டன், சிட்கோ – 641021, கோவை.

**100–வது வட்டம் :** 191, 192, 195, 198, 199, 200, 201 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**100வது வட்டப் பொறுப்பாளர் : ம. மாணிக்கம் (எ) உமாசங்கர்,** 14/2, நாச்சிமுத்துக்கவுண்டர் வீதி, மேட்டூர், போத்தனூர், கோவை.

**100அ–வது வட்டம் :** 76, 77, 78, 82, 193, 194, 196, 197 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**100அ–வது வட்டப் பொறுப்பாளர் : இரா. கனகராஜ்,** 28ஏ1, ராஜராஜேஸ்வரி நகர், போத்தனூர் – 641023, கோவை.

**குறிச்சி மேற்கு பகுதி**

**வட்டங்கள் :** 85, 85அ, 94, 94அ, 96, 96அ ஆகிய 6 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**85–வது வட்டம் :** 128, 129, 130, 148,154 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்

**85வது வட்டப் பொறுப்பாளர் : சக்திதேவி,** 93, காந்திஜி ரோடு, குறிச்சி, கோவை.

**85அ–வது வட்டம் :** 131, 155, 188, 189, 190 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்

**85அ–வது வட்டப் பொறுப்பாளர் : ஆர். செல்வக்குமார்,** 26, வெங்கடாசலபதி நகர், குறிச்சி, சுந்திராபுரம், கோவை – 641024

**94–வது வட்டம் :** 89, 90, 91, 92, 98, 99, 101, 103, 112 ஆகிய 9 வாக்குச் சாவடிகள்

**94–வது வட்டப் பொறுப்பாளர் : கே. அசோக்குமார்,** 4, ஹர்ஷா கார்டன், மாச்சம்பாளையம், சுந்திராபுரம், கோவை.

**94அ–வது வட்டம் :** 113, 114, 115, 116, 117, 118, 134, 135 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**94அ–வது வட்டப் பொறுப்பாளர் : சிவராமன் (எ) ஆர். மயில்சாமி,** 2/3சி, மாரியம்மன் கோவில் வீதி, மாச்சம்பாளையம் – 641024, கோவை.

**96–வது வட்டம் :** 156, 157, 158, 163, 165, 167, 168, 169 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**85அ–வது வட்டப் பொறுப்பாளர் : சபரி பாலு (எ) ராஜேந்திரன்,** 1/20, முதலியார் வீதி, சுந்திராபுரம், கோவை.

**96அ–வது வட்டம் :** 84, 119, 120, 121, 125, 126, 127 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**96அ–வது வட்டப் பொறுப்பாளர் : பா. ராஜா,** 164ஏ, 268, சாரதா மில் ரோடு, சுந்திராபுரம் – 641024, கோவை.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 14.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.